1987 மே 4]

விசாரணை செய்து, உண்மையிலேயே அவர்கள் கலப்பு மணம் புரிந்தவர்கள்தான் என்று தெரிந்தாலே போதும், அவர்களுக்கு அரசு பரிசு வழங்கலாம் என்ற திட்டத்தைக் கொண்டு வர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்பு மணம் செய்கின்றபொழுது, சில பேர்கள் சமுதாயத்திலே ஒத்துக்கொண்டு செய்கிறதும் உண்டு. ஆனால் நிறைய பேர், இப்படி மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப்போல், அவர்கள் அந்தப் பெண்ணை இழுத்துக் கொண்டு போய் திருமணம் செய்து விடுகிறார்கள். அந்தக் கிராமத்திலே அப்படிப் போகின்றபொழுது ஒரு சீர்திருத்தமான சூழ்நிலையில் மக்களிடம் அவர்களுக்கு வரவேற்பு இல்லாவிட்டாலும், அந்த இரண்டு மனமும் ஒன்றுபடுகின்றபொழுது, அது திருமணமாகச் செயல்படுகின்றது. அந்த இரண்டு மனமும் ஒன்றாக இருக்கின்றபொழுது, அந்தப் பெண்ணுக்கு 18 வயது முடிந்திருந்தால் மேஜராகி இருக்கிறது என்ற சூழ்நிலை ஏற்படுகிறது. அதற்கு சட்டத்தில் இடம் கிடைக்கிறது. அதே போல் ஆணுக்கு 21 வயது என்று இருந்தால் அவரும் மேஜராகி விடுகிறார். இந்த இரண்டு பேரும் ஒத்து இருந்தால் அரசு அதற்குக் கட்டாயமாகப் பாதுகாப்பு கொடுக்கிறது.

நிலக்கோட்டை புதூர் காட்டுநாயக்கர் வகுப்பினருக்கு சாதிச் சான்றிதழ்.

584---(*வினா எண் 8788) திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை புதூரில் உள்ள காட்டுநாயக்கர் வகுப்பினருக்கு சாதிச் சான்றிதழ் வழங்க மறுப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) நிலக்கோட்டை புதூர் என்ற பகுதியில் 'காட்டு நாயக்கன்' என்ற சான்றிதழ் வழங்கும்படி யாரும் விண்ணப்பிக்கவில்லை என்றும் மேற்படி கிராமத்தில் 'காட்டு நாயக்கன்' சாதியைச் சேர்ந்தவர்கள் இல்லை என்றும் அண்ணா மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தப் புதூருக்கு வந்திருந்தார்கள். காட்டு நாயக்கர் என்று அவர்களே எடுத்துக் கூறினார்கள். அங்கு வசிப்பவர்கள் ஆறு மாத காலம் வீட்டிலேயும், ஆறு மாத காலம் காட்டிலேயும் வசிக்கின்ற காட்டு நாயக்கர் சாதியைச் சார்ந்தவர்கள். ஆகவே, அவர்களது குழந்தைகள் நல்ல முறையிலே படிப்பு மற்றும் மற்ற வளர்ச்சியைப் பெறுவதற்குச் சான்றிதழ் கேட்டால் சான்றிதழ் தருவதில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அதை மனதிலே கொண்டு, அவர்களுக்குச் சான்றிதழ் வழங்க உத்தரவு அளிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்குள்ளவர்கள் குடுகுடுப்பைச் சோதிடம் சொல்லும் தெலுங்கு பேசும் நாயக்கர் என்றும், அவர்கள் யாரும் தங்களுக்குக் காட்டுநாயக்கர் என்ற சான்றிதழ் கேட்கவில்லை என்றும் அங்கேயிருக்கின்ற மாவட்ட ஆட்சியாளர் அறிவித்துள்ளார்கள். அப்படி அவர்கள் கேட்கிறபோது அங்கே நிரந்தரமாகத் தங்கியிருந்தால், அங்கே இருக்கிற ஆர்.டி.ஓ. அவர்கள் விசாரணை செய்து அவர்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்கள்.

திரு. அ. பாலுசாமி: தலைவரவர்களே, காட்டுநாயக்கன் என்று சான்றிதழ் பெறுவதற்கு என்ன ஆதாரத்தை அரசு நிர்ணயித்திருக்கிறது? மேலும், அவர்களுடைய பத்திரங்களில் காட்டு நாயக்கன் என்று இருந்து, அந்தப் பத்திரங்களைத் தாசில்தாரிடம் கொடுக்கும்போதும் அவர்கள் சான்றிதழ் வழங்குவதில்லை. அந்த மக்கள் தங்களிடம் நேரிலேயே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, தாங்கள் அதற்கு ஒரு முடிவு செய்து, அவர்களுக்குக் காட்டு நாயக்கன் சாதிச் சான்றிதழ் வழங்க உத்தரவிடுவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1976 ஆம் ஆண்டு ஆணைப்படி எங்கெங்கே காட்டு நாயக்கன் பழங்குடியினர் தங்கி இருந்தாலும், அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் பழங்குடியினருக்கான சாதிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் 36 வகையினர் அந்தப் பட்டியலில்

1987 மே 4]

இடம் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதி மக்களை விசாரித்து, அவர்களுடைய மூதாதையர்களைப் பற்றி அறிந்து தான், எத்தனை ஆண்டுகள் அந்தப் பகுதியிலே அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அறிந்துதான் சர்டிபிகேட் வழங்க முடியும்.

மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், ஜாரி புதுக்கோட்டை கிராம ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டா.

585—(*வினா எண் 8926) திரு. க. பாரமலை: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட **வினாக்** களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரைத் தொகுதி—திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், ஜாரி புதுக்கோட்டை கிராமத்திலுள்ள ஆதி திராவி டர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க நில ஆர்ஜித நடவடிக் கைகளை அரசு எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மனைப் பட்டா வழங்கப் படும்?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். மானாமதுரை வட்டம் எருக் கனை வெள்ளூர் கிராமம் ஜாரி புதுக்கோட்டை குக்கிராமத்தில் புல எண் 151/1-ல் விஸ்திரணம் 4.13 எக்கர் புஞ்சை சிவகெங்கை (ஆதி திராவிடர் நலம்) தனித் தாசில்தாரின் நடவடிக்கை எண் ந.க. 1663/8, நாள் 9—3—1984 (அவார்டு எண் 9/83). 72 ஆதி திராவிடர்களுக்கு பட்டா கொடுப்பதற்கு நில ஆர்ஜிதம் செய்யப் பட்டது.

(ஆ) 10—7—1984-ல் 68 ஆதி திராவிடர்களுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டு விட்டன.

திரு. க. பாரமலை: தலைவரவர்களே, நான் கேள்வி போடு கிறபோது பட்டாக்கள் வழங்கப்படவில்லை. இப்போது பட்டா வழங்கப்பட்டிருப்பதால், அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வழங்கப்பட்டிருக்கிற பட்டா நிலங் களில் அவர்கள் வீடு கட்டிக்கொள்ள 'தாட்கோ' மூலமாக விரைவாக எற்பாடு செய்யப்படுமா?